**SC NO.19/2013** **Date:07.02.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. செல்வம் என்ற Pw10 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. செல்வம்**

**த/பெ, - திரு. மணி**

**வயது - 55/2025**

**தொழில் - கூலி வேலை**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சின்ன காஞ்சிபுரம் நேதாஜி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் இவ்வழக்கில் கண்ட ஆவணங்களில் ஏதேனும் கையொப்பம் செய்தேனா என்றால் தெரியாது. போலிசார் கையொப்பம் வாங்கினார்களா என்றும் தெரியாது. 6வது எதிரி வெள்ள குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருப்பது என் கையொப்பம் இல்லை. கைப்பற்றுதல் மகஜரில் இருப்பது என் கையொப்பம் இல்ல.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.08.2009ம் தேதி மாலை 10 மணிக்கு வெள்ளைகேட் மேம்பாலத்தின் கீழ் பி3 காஞ்சி தாலுக்கா காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் கண்ட எதிரி குமார் (எ) வெள்ளை (எ) பாஸ்கர் என்பவரை கைது செய்து விசாரணை செய்ததாகவும் அப்போது அவர் எவ்வித தூண்டுதலும் இன்றி தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்ததாகவும் அதில் நானும் கோதண்டன் என்பவரும்

கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரியையும் எங்களையும் அழைத்து கொண்டு போய் அதே நாள் காலை 11.30 மணிக்கு இவ்வழக்கில் கண்ட சான்று பொருளான இரும்பு கத்தி ஒன்றை அடையாளம் காட்டி ஆஜர் செய்ததாகவும் அப்போது தயாரிக்கப்பட்ட அத்தாட்சியில் நானும் கோதண்டனும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறு விசாரணை இல்லை.

**SC NO.19/2013** **Date:07.02.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. செல்வம் என்ற Pw9 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. செல்வம்**

**த/பெ, - திரு. ஏழுமலை**

**வயது - 42/2025**

**தொழில் - பட்டு நெசவு**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது புஞ்சையரசதாங்கல் கிராமம், திருவள்ளுவர் குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் பட்டு தறி வேலை செய்கிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் இவ்வழக்கில் கண்ட ஆவணங்களில் ஏதேனும் கையொப்பம் செய்தேனா என்றால் தெரியாது. போலிசார் கையொப்பம் வாங்கினார்களா என்றும் தெரியாது. எதிரி 7வது எதிரி ஜெகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது மட்டும் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.08.2009ம் தேதி மாலை 10 மணிக்கு வெள்ளைகேட் மேம்பாலத்தின் கீழ் பி3 காஞ்சி தாலுக்கா காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் கண்ட எதிரி ஜெகன் என்பவரை கைது செய்து விசாரணை செய்ததாகவும் அப்போது அவர் எவ்வித தூண்டுதலும் இன்றி தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த

ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்ததாகவும் அதில் நானும் ஜெயராஜும் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரியையும் எங்களையும் அழைத்து கொண்டு போய் அதே நாள் காலை 11.30 மணிக்கு கதிர்பூர் பாண்டியன் தியட்டருக்கு எதிர்புறமாக விப்பேடு சாலையில் செங்கல் சூளைக்கு அருகில் உள்ள முள் தோப்பிலிருந்து TN 23 AP 2345 என்ற எண்ணுள்ள ஸ்குவாலிஸ் வண்டியை அடையாளம் காட்டி ஆஜர் செய்ததாகவும் அப்போது தயாரிக்கப்பட்ட அத்தாட்சியில் நானும் ஜெயராஜும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறு விசாரணை இல்லை.

**SC NO.19/2013** **Date:07.02.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. ஜெயராஜ் என்ற Pw8 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. ஜெயராஜ்**

**த/பெ, - திரு. மேஷா**

**வயது - 41/2025**

**தொழில் - அவசர ஊர்தி ஓட்டுநர்**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஆட்டுப்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் அவசர ஊர்தி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை கடந்த 15 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் ஓர் இடத்தில் வைத்து கையொப்பம் போட சொன்னார்கள், நானும் போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. எதிரி 7வது எதிரி ஜெகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது மட்டும் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.08.2009ம் தேதி மாலை 10 மணிக்கு வெள்ளைகேட் மேம்பாலத்தின் கீழ் பி3 காஞ்சி தாலுக்கா காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் கண்ட எதிரி ஜெகன் என்பவரை கைது செய்து விசாரணை செய்ததாகவும் அப்போது அவர் எவ்வித தூண்டுதலும் இன்றி தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த

ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்ததாகவும் அதில் நானும் செல்வம் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரியையும் எங்களையும் அழைத்து கொண்டு போய் அதே நாள் காலை 11.30 மணிக்கு கதிர்பூர் பாண்டியன் தியட்டருக்கு எதிர்புறமாக விப்பேடு சாலையில் செங்கல் சூளைக்கு அருகில் உள்ள முள் தோப்பிலிருந்து TN 23 AP 2345 என்ற எண்ணுள்ள ஸ்குவாலிஸ் வண்டியை அடையாளம் காட்டி ஆஜர் செய்ததாகவும் அப்போது தயாரிக்கப்பட்ட அத்தாட்சியில் நானும் செல்வமும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறு விசாரணை இல்லை.